07 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

# தமிழ்

## மொழியும் இலக்கியமும்

ZOOM ONLINE CLASS

# தரம் 07

முதலாந் தவணை

## அலகு 04 – காட்டு விலங்களைக் காப்போம்




தமிழ் ஆசான்
"அகரம் திணேஸ்"
SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE



REGISTER NOW 0778054232

AGARAM DHINES ONLINE ACADEMY

# காட்டு விலங்குகளைக் காப்போம்

**1. கீழே கட்டத்தினுள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புங்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வளங்களாகும் | முல்லை | நிறைவு | களிப்படைய | ஆரவாரம் | நானிலம் |

அ. தொல்காப்பியர் நால்வகை நிலங்களையும்........................ என்றார்.

ஆ. இயற்கை, கண்களை ஈர்த்துக்............................................ வைக்கும்.

இ. காடுகளில், அச்சத்தைத் தரும் ஒலிகளின்......................... மிகுந்திருக்கும்.

ஈ. வற்றாது ஓடி வளம் பெருக்கும் ஆறுகள் இயற்கை................................

உ. காடும் காடு சார்ந்த நிலப்பரப்பும்......................................... எனப்படும்.

ஊ. செயற்கைப் பொருட்கள் மனிதத் தேவைகளை மட்டுமே ..........................செய்யும்.

**2. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.**

அ. மரங்களடர்ந்த : ............................................................................................

ஆ. முல்லையாகும் : ............................................................................................

இ. வானளாவ : ............................................................................................

ஈ. களிப்படைய : ............................................................................................

உ. வளங்களாகும் : ............................................................................................

ஊ. மாண்புற : ............................................................................................

**3. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுங்கள்.**

அ. துள்ளி + ஓடும் :...........................................................................

ஆ. வேட்டை + காரன் :...........................................................................

இ. காலடி + ஓசை :...........................................................................

ஈ. வாழ் + இடம் :...........................................................................

உ. உடைமை + ஆகும் :...........................................................................

ஊ. மதிப்பு + அற்றவை :...........................................................................





Agaram Dhines

**4. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுங்கள்.**

அ. காட்டில் துள்ளியோடும் மான்களைக் காணமுடியாது. ( )

ஆ. வனவிலங்குகளின் ஆரவாரம் காட்டையே அதிரச் செய்யும். ( )

இ. நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்குக் காடும் காட்டு விலங்குகளும் காரணமாகும். ( )

ஈ. வனவிலங்குகள் நாட்டின் உடைமை ஆகும். ( )

உ. யானைக்கு நினைவாற்றல் மிகுதி. ( )

**5. பின்வரும் சொற்களைப் பொருத்தமாகத் தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| அ. களிப்பு | கொடுக்கும் |
| ஆ. நல்கும் | குறைந்து |
| இ. புகலிடம் | சேற்றுநிலம் |
| ஈ. பெற்றம் | மகிழ்ச்சி |
| உ. காலாழ்களர் | சரணாலயம் |
| ஊ. அருகி | பசு |

**6. கீழே ஒழுங்கின்றிக் கிடக்கும் வாக்கியங்களைக் கருத்துக்கு ஏற்ப ஒழுங்குபடுத்திப் பந்தியாக எழுதுங்கள்.**

அ. எனவே உண்ணும் உணவு போசணை நிறைந்ததாக இருக்க வேண்டும்.

ஆ. உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள நிறையுணவு அவசியம்.

இ. மனிதனது உடல் வளர்ச்சிக்கும் உடல் நலம் பேணுவதற்கும் உணவு அவசியமானது.

ஈ. உணவு மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் பிரதானமானது.

உ. மனிதன் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது.

.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

**7. பாடப் புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

அ. காடுகளின் (மரங்களின்) பயன்கள் மூன்று தருக.

.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

Agram Dhines

ஆ. யானையின் பயன்கள் மூன்று தருக.

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

இ. சில விலங்குகள் அடியோடு அழிய மனிதன் எவ்விதம் காரணமாகிறான்?

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

ஈ. காட்டு விலங்குகள் எக்காரணங்களால் அருகி வருகின்றன?

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

உ. தொல்காப்பியர் நால்வகை நிலங்களையும் எப்பெயர் கொண்டு வகுத்தார்?

…………………………………………………………………………………………………

ஊ. காட்டில் காணப்படும் இயற்கை வளங்கள் எனக் கட்டுரையில் குறிக்கப்பட்டவை எவை?

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

**8. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களைக் கருத்துக்கு ஏற்ப ஒழுங்குபடுத்திப் பந்தியாக எழுதுங்கள்.**

அ. வழிபாட்டுக்குரிய கற்களில் மழை வெயில் படாது கொட்டகைகள் அமைக்கப்பட்டன.

ஆ. கொட்டகைகள் மாறி ஒவ்வொரு தெய்வத்துக்கும் தனித்தனி கோயில்கள் எழுந்தன.

இ. மரநிழல்களில் கற்களை நாட்டி வழிபடும் வழக்கம் பின்னர் ஏற்படலாயிற்று.

ஈ. இன்று உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு மரம் சிறந்ததெனக் கூறுவதற்குக் காரணம் இதுவே.

உ. ஆதியில் மரநிழல்களே வழிபாடு செய்யும் இடங்களாக இருந்தன.

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

**9. பின்வரும் வாக்கியங்களை முற்றுப்பெற்ற (பூரண) வாக்கியமாக எழுதுங்கள்.**

அ. கல்வி நமக்குப் பல நன்மைகளைத்……………………………….

ஆ. ஒவ்வொருவனும் கடவுளை நேசிப்பது போலவே பிற உயிர்களையும்……………………..

இ. மனிதன் அகங்காரத்தில் இருந்து தாழ்ந்தால்…………………………………….

Agaram Dhines

ஈ. தமிழர் தமது மொழியை அருமையாகப் போற்றி........................................

உ. பணியின் கொடுமையால் வாடிய மக்கள் வேனிலின் வரவை......................................

**10. கீழே தரப்பட்டுள்ளவை சொற்றொடராயின் (சொ) எனவும் வாக்கியமாயின் (வா) எனவும் அடைப்பினுள் எழுதுங்கள்.**

அ. குரங்குக் கூட்டம் மாம்பழங்களைக் கடித்துக் குதறின. ( )

ஆ. இன்று வெயில் நன்றாக ( )

இ. தொலைக்காட்சி அறிவு விருத்திக்கு உதவும். ( )

ஈ. கொதித்து ஆறிய நீரைக் குடிப்பதால் ( )

உ. உணவுப் பயிர்கள் செவ்வையாக வளர்ந்தால் ஏராளமான பயன்களைத் தரும். ( )

**11. பின்வரும் எழுத்து பேதச் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமையுங்கள்.**

அ. அறி : ..................................................................................................

அரி : ..................................................................................................

ஆ. கரை :..................................................................................................

கறை : ..................................................................................................

இ. கூரை :..................................................................................................

கூறை : ..................................................................................................

ஈ. வரை (மலை): ..................................................................................................

வறை :..................................................................................................

உ.பறை (முரசு) : ..................................................................................................

பாரை : ..................................................................................................

**12. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.**

அ. ஆசை .......................... உ. சுகம் ................................

ஆ. இரகசியம் .......................... ஊ. சாதாரணம்................................

இ. நியாயம் ............................ எ. செறிவு ...............................

ஈ. ஈதல் .............................. ஏ. இகம் ...............................

**13. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுங்கள்.**

அ. சிறுபாம்பு ஆனாலும் பெருந்தடி கொண்டடி. ( )

ஆ. ஆறிலும் சாவு நூறிலும் சாவு உண்டு. ( )



Agaram Dhines

இ. கடவுளை நம்பியோர் கைவிடப்படார். ( )

ஈ. முயற்சி திருவினையாக்கும். ( )

உ. பாம்புக்குப் பால் வார்க்கக் கூடாது. ( )

**14. கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளுக்கேற்ப பொருத்தமான சிறு குறிப்புக்களை அல்லது வாக்கியங்களை எழுதுங்கள்.**

அ. எமது சுற்றாடல்

..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

ஆ. கல்வியின் அவசியம்

..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

இ. பறவைகள் பலவிதம்

..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

**15. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுங்கள்.**

அ. உயிர் எழுத்துக்கள் 12 ஆகும். ( )

ஆ. மெய் எழுத்துக்கள் 30 ஆகும். ( )

இ. வல்லின எழுத்துக்கள் க், ச், ட், த், ப், ற் (ஆறு) ( )

ஈ. உயிர்மெய் எழுத்துக்கள் 30 ஆகும். ( )

உ. கூட்டு எழுத்துக்கள் அ,இ,உ ( )

ஊ. ஜ,ஸ,ஷ,ஹ,ஸ்ரீ,க்ஷ கிரந்த எழுத்துக்களாகும். ( )

**16. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

அ. உயிர்க்குறில் எழுத்துக்களாவன :.........................................................................

ஆ. உயிர்நெடில் எழுத்துக்களாவன :.........................................................................

இ. மெல்லின எழுத்துக்கள் ஆறு அவை :...............................................................

ஈ. இடையின எழுத்துக்கள் ஆறு அவை :...............................................................



Agaram Dhines

உ. சுட்டு எழுத்துக்களைத் தந்து, அவை எவ்விதம் பயன்படுகின்றன?

(உ-ம்) அது

சுட்டு எழுத்துக்கள் :...........................................................................................................

சுட்டெழுத்து சொற்கள் :......................................................................................................

**17. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு ஒரு பொருட் பன்மொழி (ஒத்த சொல்) மூன்று எழுதுங்கள்.**

(உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| அழகு | வடிவு | வனப்பு | எழில் |
| அ. கடவுள் | ......................... | ......................... | ......................... |
| ஆ. பூமி | ......................... | ......................... | ......................... |
| இ. உண்மை | ......................... | ......................... | ......................... |
| ஈ. நித்திரை | ......................... | ......................... | ......................... |
| உ. தாமரை | ......................... | ......................... | ......................... |

**18. கீழே தரப்பட்டுள்ள இரட்டைச் சொற்களை வைத்துப் பொருள் புலப்பட வாக்கியம் அமையுங்கள்.**

அ. குடுகுடு :...........................................................................................................

ஆ. கமகம :...........................................................................................................

இ. பொலுபொலு :...........................................................................................................

ஈ. சலசல :...........................................................................................................

உ. தகதக :...........................................................................................................

**19. பின்வரும் பேதச் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ. ஆல் :...........................................................................................................

ஆழ் :...........................................................................................................

ஆள் :...........................................................................................................

ஆ. வலி :...........................................................................................................

வழி :...........................................................................................................

வளி :...........................................................................................................

Agaram Dhines

இ. குழவி (பிள்ளை) :..........................................................................................................

குளவி (கொட்டும் ஈ):......................................................................................................

குலவி (உறவாடி) :..........................................................................................................

20. காட்டு விலங்குகளை பாதுகாப்போம் எனும் தலைப்பில் ஒரு பந்தி எழுதுங்கள்.

.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................

21. கீழே தரப்பட்டுள்ள காய்களுக்குரிய இளமைப் பெயர்களை (மரபுப் பெயர்களைத்) தொடர்புபடுத்துங்கள்

| | |
|---|---|
| அ. வாழை | பிஞ்சு |
| ஆ. மா | குரும்பை |
| இ. பலா | வடு |
| ஈ. பனை | கச்சல் |
| உ. வெண்டி | மூசு |

22. பின்வரும் பிராணிகளுக்கான மரபுத் தொனிகளை (ஒலி) எழுதுங்கள்.

அ. புலி .................................................................................................

ஆ. புறா .................................................................................................

இ. ஆந்தை .................................................................................................

ஈ. குதிரை .................................................................................................

உ. பாம்பு .................................................................................................

Agaram Dhines